உ
குகமயம்
வேலும் மயிலும் துணை

# நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை தலைவரின் ஆண்டறிக்கை
## 28 புரட்டாதி 2014

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம் ஒன்றுடன் எனது ஆண்டறிக்கையை உங்கள்முன் சமர்ப்பிக்கின்றேன்.

*"திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும்*
*திரு வெண்ணீறு அணியாத திருவில் ஊரும்*
*பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும்*
*பாங்கினொடு பல தளிகள் இல்லா ஊரும்*
*விருப்பொடு வெண்சங்கு ஊதா ஊரும்*
*விதானமும் வெங்கொடியும் இல்லா ஊரும்*
*அருப்போடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும்*
*அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே."*

**"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்பதே இப்பாடலின் சாராம்சம்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் எமது திருமுருகன் திருப்பணிசபையின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன். கடந்த வருடம் உங்களுக்கு வாக்களித்தபடி எம்பெருமான் திருமுருகனும் அவரது பரிவாரங்களும் கடந்த ஆனி மாதம் 8ம் திகதி ஒரு சுபநேரத்தில் தங்களது புதிய இல்லத்திற்கு குடிபுகுந்தார்கள். இந்த சுபநிகழ்ச்சிக்கு நியூசிலாந்தின் பல இடங்களிலிருந்து பல பக்தர்கள் மண்டபம் நிறைய வந்திருந்து முருகப்பெருமானின் ஆசியைப் பெற்றார்கள். மிகவும் குறுகிய காலத்தில் இந்த சாதனையைப் படைக்க எம்பெருமான் கந்தவேளே எமக்கு உறுதுணையாக இருந்தார். **"தனக்கு உவமையில்லாதவர்", "தாயினும் சிறந்த தலைவர்"** எம் ஆறுமுகக் கடவுள். அவரது தாழ் சேர்ந்தோம் அழகான சிறு கோயில்கள் உருவாகின. இந்த ஆண்டறிக்கையில் இந்தத் திருக்கோயில் அமைந்த வரலாற்றைப் பற்றியே குறிப்பிட விரும்புகிறேன்.

## <u>145 சேர்ச்வீதி ஓட்டாகூவில் புதிய கோயில்</u>.

சகல வசதிகளையும் கொண்ட வேதாகம முறைப்படி அமைந்த கோயிலொன்றை அமைக்க வேண்டுமென்ற எமது தொண்டர்களின் அயராத முயற்சியில் 2012 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் 145 சேர்ச்வீதியில் இப்புதிய கட்டிடத்தை வாங்கினோம். எங்கள் பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வரை படத்தை வரைந்து ஆக்லாந்து நகரசபையின் வள ஆய்வறிக்கையையும் ஓரிரு மாதங்களில் பெற்றுக் கொண்டோம். இப்புதிய கட்டிடத்தில் ஒரு முறையான சைவக்கோயிலையும் ஒரு சமூக மண்டபத்தையும் அமைப்பதற்கு இடவசதி இருந்தது.

"Maka Associate" கட்டிடக்கலை நிறுவனம் இந்தவரைபடத்தினை வரைந்துதர 2013 பங்குனி மாதத்தில் கட்டிட அனுமதி (Building Consent) பெற விண்ணப்பித்தோம். முக்கியமாக எங்கள் கோயிலின் 15மீற்றர் உயர ராஜகோபுரம் பல பொறியிலாளர்களினால் சரிபார்க்கப்பட்டது. இப்புதிய கட்டிடங்கள் நியூசிலாந்தில் வரும் நில நடுக்கத்திற்கு தாக்குபிடிக்குமா என்றும் பல இடங்களுக்கு அனுப்பி சரிபார்த்தார்கள். பல தடைகளையும் தாண்டி எங்கள் முருகப் பெருமானின் பேரருளால் எந்தவித நிபந்தனையும் இன்றி கட்டிட அனுமதி 2013 ஆவணி மாதத்தில் கிடைக்கப் பெற்றோம். "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பதற்கு இதுவே ஒரு சாட்சியாகும். இந்த "கட்டிட அனுமதி" பெறுவதற்கு எம் தொண்டர்கள் பலர் எனக்கு உறுதுணையாக இருந்தார்கள். புதியகோயில் அமைப்பின் முதற்கட்டமாக சென்ற 24-03-2013 அன்று 9மணிமுதல் 11மணிவரை இருந்த சுபமுகூர்த்த வேளையில் பூமி பூஜை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியிலேயே எமது தொண்டர்கள் பலர் சுவர்கற்களை வாங்கி எமது புதிய ஆலயம் உருவாகுவதற்கு தமது பங்களிப்பினை வழங்கினார்கள்.

இதன் பின்னர் தென்னிந்தியாவிலேயே மிகப்பிரசித்தி பெற்ற ஒரு ஸ்தபதி .திரு தட்சிணா மூர்த்தியவர்கள் இங்கு வருகைதந்து எமது வரைபடத்தை சைவாகம முறைப்படி சிலசில மாற்றங்களுடன் வரைந்து தந்தார்.

## புதிய கோயிலின் அமைப்புத்திட்டம்

பணவசதிக்கமைய எமது புதிய கோயிலின் நிர்மாணத்தை பல கட்டங்களாக அமைக்க எமது நிர்வாகசபை தீர்மானித்தது. இதற்காக ஆக்லாந்து நகரசபை அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்தோம். இதன்படி முதற்கட்டமாக மறுவா வீதியில் உள்ள விக்கிரகங்களை புதியகட்டிடத்திற்கு இடமாற்றம் செய்தோம். இந்த சுபநிகழ்ச்சி திட்டமிட்டபடி 13ம்திகிதி மார்கழி 2013 இல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற சிட்னியில் இருந்து வந்த திரு நிர்மலேஸ்வரக்குருக்கள் எமது ஆலய குருமாருக்கு மிகத் துணையாக இருந்தார். இந்த மங்களகரமான நிகழ்ச்சியில் மண்டபம் நிரம்பிய தொண்டர்கள் பங்குபற்றினார்கள். இந்த நிகழ்ச்சி திட்டமிட்டபடி நிறைவேற எமது நிர்வாகசபை உறுப்பினர்களும், பல தொண்டர்களும் உறுதுணையாக இருந்தார்கள். <u>நாங்கள் திட்டமிட்டயாவற்றையும் நடாத்தி முடித்தவர் எம்பெருமான் முருகவேளே.</u>

புதிய கோயில்கள் அமைக்கும் வேலைகளை 2014 தைத்திங்களில் தொடங்கினோம். முதலில் பிள்ளையார் சன்னிதானத்தை முற்றாக நிறைவுசெய்து புதுவருடப்பிறப்பன்று எமது பக்தர்களுக்கு காட்டினோம். எமது பக்தர்கள் தந்த பேராதரவுடன் மற்றக்கோயில் வேலைகள் யாவற்றையும் ஒரே நேரத்தில் தொடங்கினோம். இதற்கிடையில் எப்படியும் முருகன் பிறந்தமாதமாகிய வைகாசித்திங்களில் கோயில் குடமுழுக்கை நடத்த தீர்மானித்து ஆனி மாதம் 8ம் திகதியை கும்பாபிஷேக தினமாக எங்கள் தொண்டர்களுக்குத் தெரியப்படுத்தினோம். பலபேர் இதை உங்களால் சாதிக்க முடியாது என்று சவால் விட்டார்கள். நாங்களோ எம் பெருமானை சிக்கனப் பிடித்தோம். பல தொண்டர்கள் கடைசி இருவாரங்களிலும் இரவுபகலாக வேலை செய்தார்கள். ஒப்பந்தகாரர்களும் அயராது முயற்சி செய்து குறிப்பிட்ட திகதியில் கும்பாபிஷேகம் நடைபெற ஒத்துழைப்பு அழித்தார்கள். இக்கட்டத்தில் இந்த நிர்மான வேலைக்கு எனக்கு உறுதுனையாக இருந்த எனது ஸ்தபதி, Project Manager என்று பல பொறுப்புக்களைக் கையாண்ட எமது நிர்வாகசபை உறுப்பினர் ஒருவரை என் உளமார பாராட்ட விரும்புகிறேன். இவரின் முன்யோசனையாலேயே இவ்வாலயத்தை எம்மால் சிறப்பாக அமைக்க முடிந்தது. மற்றும் இவ்வேளையில் எங்களது நெருக்கடிகளையும் தாங்கிக் கொண்டு இராப்பகலாக Invoice Settlement களை உரிய காலத்தில் நிறைவேற்றிய Finance Committee உறுப்பினர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்தூய பணிக்கு முருகபக்தர்கள் பலர் பல வழிகளில் உதவி செய்தார்கள். இவர்கள் அனைவருக்கும் திருமுருகன் திருப்பணிச் சபையின் சார்பில் எனது மனமுவந்த நன்றி.

எமது புதிய கோயிலில் இப்போது புதிதாக பாலலிங்கம், கேதாரலிங்கம், விஷ்ணு, பைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர் நிர்மானிக்கப்பட்டுள்ளார்கள். பாலலிங்கத்திற்கு பக்தர்களே பால் அபிஷேகம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. மூலமூர்த்தியான முருகப்பெருமானுக்கு முன்னர் பலிபீடம், மயூரம், கொடிக்கம்பம், பிள்ளையார் ஆகியன நிறுவப்பட்டுள்ளது. இவைகளை நிர்மாணிக்க உதவிய முருகபக்தர்கட்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துகொள்கின்றேன். வெளிவீதி சுற்றவும் வசதிகள் செய்துள்ளோம். வருகின்ற 2015 தைப்பூச தினத்தில் எமது கோயிலில் 10நாள் திருவிழாவையும் தேரோட்டம், தீர்த்தம் ஆகியனவும் நடாத்த திட்டமிட்டுள்ளோம். <u>இவை எல்லாமே எம்பெருமான் நடத்திய அற்புதமே.</u>

*"அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்*
*பிரம்மாய் நின்றதோர் பிளம்பதோர் மேனியாகி*
*கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும்*
*கொண்டே ஒரு திருமுருகன் வந்து ஆக்லாந்தில் உதித்தனன்*
*இந்த உலகம் உய்ய"*

எம்பெருமான் தனது புதிய வாசஸ்தலத்திற்கு குடிபெயர நடந்த 5 நாள் விழாவுக்கும் நியூசிலாந்தில் உள்ள குருக்கள்மார்களும் சிட்னியில் இருந்து வந்த

நிர்மலேஸ்வரக்குருக்களும் மிக சிறப்பாக வேத மந்திரம் ஓதினார்கள். எல்லா நிகழ்ச்சிகளும் குறிப்பிட்ட நேரத்தில் சிறப்பாக நடைபெற உதவிய ஆலயகுருமார்கள் அனைவருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இளைஞர்கள் பங்களிப்பு

பாலஸ்தாபன நிகழ்ச்சி, கும்பாபிஷேக நிகழ்ச்சி, மண்டலாபிஷேக பூஜை இவை யாவற்றிலும் எமது இளைஞர்கள், இளம் பெண்கள் பங்குபற்றி தங்கள் பங்களிப்பைச் செய்தார்கள். மற்றும் பல திருமணமான இளைஞர்கள் தங்கள் குடும்பத்துடனேயே வந்திருந்து எங்கள் கோயிலைசுத்தப்படுத்த உதவினார்கள். திரு உமாகரன் கும்பாபிஷேகம் அன்று தெய்வங்களை பிரதிஸ்டை செய்வதற்கு பேருதவியாக இருந்தார். கோயில் கட்டிடம் அமைக்க ஆரம்பித்தநாளிலிருந்து மண்டலாபிஷேகம் முடிந்த அன்று வரை வரைபடங்களை அமைப்பதற்கும் அறிவித்தல்களை எழுதுவதற்கும் உதவியாக இருந்த திரு உமா மகேஸ்வரன் குடும்பத்தினருக்கும் எனது மனமுவர்ந்த நன்றி. இந்தக் கோயிலை எதிர்காலத்தில் நிர்வகிக்கும் பொறுப்பு எமது இளைய தலைமுறையையே சாரும்.

## கும்பாபிஷேகமும் கும்பாபிஷேக மலர் வெளியீடும்

கட்டிட வேலைகள் முழுமும்மரமாக நடந்து கொண்டிருந்த வேளையில் கும்பாபிஷேக குழுவினர் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். கோயிலை சுத்தம் செய்து அலங்கரிப்பதில் கவனம் செலுத்தினார்கள். கும்பாபிஷேகத்துக்குரிய சாமான்களை வாங்குவதில் சிலர் ஈடுபட்டிருந்தார்கள். குருக்கள்மார் அனைவருக்கும் உணவு பரிமாறுவதற்காகவே ஒரு குடும்பம் தங்களை முழுதாக அர்பணித்தது. இப்பணியிலும் கோயில் சுத்திகரிப்பு வேலைகளிலும் பங்குகொண்ட திருமதி சிவச்செல்வி ரவிகரன் குடும்பத்தினருக்கு முருகன் நல்லாசியும் எனது நன்றிகளும் உரித்தாகுக. கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் யாவும் மிகச்சிறப்பாக நடைபெற உதவிய குருமார்களுக்கும், தொண்டர்களுக்கும் கும்பாபிஷேக குழுவினருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கும்பாபிஷேக மலரைத் தயாரிப்பதில் ஒரு குழுவினர் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். இம்மலரில் வாழ்த்துச் செய்திகள் உட்பட பல முக்கிய சைவ அநுட்டான கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த மலர் சிறப்பாக அமைவதற்கு இரவுபகல் பாராது உழைத்த எமது தொண்டர்கள் அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றி. மிகமுக்கியமாக திரு/திருமதி கதிர்காமநாதன் அவர்களுக்கும் எமது நிர்வாகசபையின் மனமுவர்ந்த பாராட்டுக்கள்.

## கோயில் நிதிநிலமை

எமது கோயிலில் இப்போது தினப்பூசைகள், உற்சவங்கள், திருவிழாக்கள் முதலியன செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பணப்பற்றாக்குறை காரணமாக பக்தர்கட்குரிய வசதிகள் முற்றாக நிறைவேற்றப்படவில்லை. கோயிலின் கூரை, Celing, Heating, Flooring வசதிகளை உடனடியாக செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இதுவரை எங்களுக்கு உதவி அளித்த மாதிரி மிகுதி வேலைகளையும் நிறைவேற்ற உங்கள் உதவியை நாடி நிற்கிறோம். குறைந்த பட்சமாக டொலர் 200,000 தேவைப்படுகின்றது. இந்த தெய்வீகப்பணி நிறைவேற உங்கள் பேராதரவை நாடி நிற்கிறோம். எங்கள் காலத்திலேயே இப்பணிகளை செய்து முடித்தால் தென்குமரிக்கண்டத்திலும் ஒரு அழகான முருகன் கோயில் அமைத்த பெருமை நம் எல்லோருக்கும் வந்துசேரும்.

மேற்குறிப்பிட்ட வேலைகள் யாவும் முடிந்த பின்னரே இராஜகோபுர வேலைகளைத் தொடங்கவுள்ளோம். இவையாவற்றிற்கும் நிதி சேர்க்கும் முகமாக பல முயற்சிகளை எமது தொண்டர்கள் செய்து வருகிறார்கள். சிறுதுளிபெருவெள்ளமாகும் தொடர்ந்து உதவுங்கள். இது நாம் எமது மக்களுக்காகவும் எதிர்காலசந்ததியினருக்காகவும் செய்யும் தொண்டே அன்றி எமது இறைவன் மகேசனுக்காகச் செய்யும் தொண்டல்ல. எமது காலத்திலேயே இவ்வேலைகள் யாவற்றையும் பூர்த்திசெய்ய எங்களுக்கு பக்க பலமாக இருந்து உதவுங்கள் என்று உங்களை வேண்டி எம் முருகப் பெருமான் ஆசி

உங்கள் அனைவருக்கும் கிடைக்க அவரை உளமார வேண்டுகிறேன். மேலும் இக் கோயிலின் வளர்ச்சிக்கும் நமது சைவசமயப் பணி தொடரவும் தொடர்ந்து உதவி செய்துவரும் தொண்டர்கள் அனைவருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் தினசரி காலை மாலை பூசைகளையும் முக்கியமான வருடாந்த திருவிழாக்களையும் சிறப்பாகச் செய்து எமது கோயிலின் வளர்ச்சிக்காகப் - பாடுபட்டுவரும் எமது ஆலய பிரதம குருக்கள் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ ராஜராஜேஸ்வரக்குருக்கள் மற்றும் பிரம்மஸ்ரீ மயூரநாதக்குருக்கள் ஆகியோருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இங்கு குறிப்பிடப்படாத பலர் பல்வேறு வழிகளில் எமது ஆலயத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய வண்ணம் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது ஆலய நிர்வாக சபையின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். கந்தனை எந்த உறவு கொண்டு வழிபட்டாலும் அவனிடம் யாம் வேண்டுவது

*"பொன்னும் பொருளும் போகமும் அல்ல நின்பால்*
*அருளும் அறனும் அன்பும் மூன்றுமே"*

என அவனது திருமலரடிசேரப் பிரார்த்தித்து உங்கள் அனைவருக்கும் எமது திருமுருகன் நல்லாசிகள் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன்.

"விழிக்குத்துணை நின்திரு மென்மலர்ப்பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத்துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே."

நன்றி
வணக்கம்.

க. குமாரசாமி
கந்தையா குமாரசாமி
தலைவர்
நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை
ஒக்லாந்து நியூசிலாந்து.